உ
சிவமயம்



புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி வேளாண்குல திலகர்

# அமரர் தில்லையம்பலம் சதாசிவம் அவர்களின்

(ஓய்வுபெற்ற அதிபரும் பிரபல சோதிடரும்–புங்குடுதீவு)


சிவபதப்பேறு குறிக்கும்

# நினைவு மலர்

12.01.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



எம்மை வளர்த்துப் பேணிக்காத்து
வாழ்வு தந்து வளமாக்கிய
தலைவர் தில்லையம்பலம் சதாசிவம்
அவர்கள் 31.12.2001 அன்று கிராஞ்சியம்பதி
முருகன் பதம் சென்றடைந்தமை குறித்து
வெளியிடப்படும் இந் நினைவு மலரினை
காணிக்கையாக்குகின்றோம்

குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



புங்குடுதீவு மேற்கு இறுப்பிட்டி
வேளாண்குல திலகர்

# அமரர் தில்லையம்பலம் சதாசிவம்

(ஓய்வுபெற்ற அதிபரும் பிரபல சோதிடரும் . புங்குடுதிவு)
அவர்களின்
சிவப்பேறு குறித்த

# நினைவு மலர்

12.01.2002

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அமரர்
# தில்லையம்பலம் சதாசிவம்



**தோற்றம்**
**17.10.1917**

**மறைவு**
**13.12.2001**

## திதி நிர்ணயப்பா

ஆண்டு விஷு கார்த்திகை தமிழ் இருபத்தெட்டு குருநாள்
மாண்டதிதி அபரபக்க சதுர்த்தசியில் மகிபன்
சதாசிவம் ஆசான் நல்அதிபன் எய்தினான்
சதாசிவனார் குமரன் திருவடிக்கேதேர்ந்து.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# பஞ்ச புராணம்

## தேவாரம்

அந்த ணாளனுன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரண மாக
வந்த காலன்றன் ஆருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வன்மைகண் டடியேன்
எந்தை நீயெனை நமன்தமர் நலியில்
இவன்மற் றென்னடி யானென விலக்கும்
சிந்தையால் வந்துன் திருவடி யடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூரு ளானே.

## திருவாசகம்

மெய்தான் அரும்பி விதிர்விதித்துன்
விரையார் கழற்கென்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பியுள்ளம்
பொய்தான் தவிர்த்துன்னைப் போற்றி
சயசய போற்றியென்னுங்
கைதான் நெகிழவிடே னுடையாய்
என்னைக் கண்டுகொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடையெம் அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடியெம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த
தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சிலதேவர்
சிறுநெறி சேராமே
வில்லாண்ட கனகத் திரண்மேரு
விடங்கன் விடைப்பாகன்
பல்லாண்டெனும் பதங்கடந் தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத வின்பவன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல்
உனையென்றும்
மறவாமைவேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ யாடும்போதுநின் னடியின்கீழ் இருக்க வென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்தஏறும் கரியுரிபோர்வையும் எழில்நீறும்
இலங்குநூலும் புலியதளாடையும் மழுமானும்
அசைந்ததோடுஞ் சிரமணிமாலையும் முடிமீதே
அணிந்தஈசன் பரிவுடன்மேவிய குருநாதா
உசந்தசூரன் கிளையுடன்வேரற முனிவோனே
உகந்தபாசங் கயிறொடுதூதுவர் நலியாதே
அசந்தபோதென் துயர்கெடமாமயில் வரவேணும்
அமைந்தவேலும் புயமிசைமேவிய பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## பட்டினத்தார் பாடல்

ஐயிரண்டு திங்களா யங்கமெலாம் நொந்து பெற்றும்
பையவென்ற போதே பரிந்தெடுத்துச் செய்யவிரு
கைப்புறத்தி லேந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்போ மினி.

ஐயும் தொடர்ந்து விழியும் சொருகி அறிவிழந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்றபோது ஒன்றுவேண்டுவன் யான்
செய்யும் திருவொற்றியூர் உடையீர் திருநீறும் இட்டு
கையும் தொழப்பண்ணி ஐந்தெழுத்தும் ஓதவும் கற்பியுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

நக்கீரதேவர் அருளிய

169 அடிகளைக் கொண்ட

# விநாயகர் திருவகவல்

சீர்தரு மூலச் செழுஞ்சுடர் விளக்கே
கார்நிற மேனிக் கற்பகக் களிறே
அல்லல் வினையை அறுத்திடு ஞான
வல்லபை தன்னை மருவிய மார்பா,
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தி
சங்கர னருளிய சற்குரு விநாயக,
ஏழை யடியேன் இருவிழி காண
வேழ முகமும் வெண்பிறைக் கோடும்
பெருகிய செவியும் பேழை வயிறும்
திருவளர் நுதலில் திருநீற் றழகும்
சிறுத்த கண்ணுஞ் சீதளப் பார்வையும்
நறுந்திகழ் நாசியும் நால்மலர்ப் பாதமும்
நவமணி மகுட நன்மலர் முடியும்
கவச குண்டல காந்தியும் விளங்கச்
சிந்திரத் திலகச் சந்தனப் பொட்டும்
ஐந்து கரத்தின் அழகும் வீற்றிருக்க
பாச வினையைப் பறித்திடும் அங்குச
பாசத் தொளியும் பன்மணி மார்பும்
பொன்னா பரணமும் பொருந்து முந்நூலும்
மின்னா மெனவே விளங்கு பட்டழகும்
உந்திச் சுழியும் உரோமத் தழகும்
தொந்தி வயிறுந் துதிக்கையுந் தோன்ற
வேதனும் மாலும் விமலனும் அறியாப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதச் சலங்கை பலதொனி யார்ப்பத்
தண்டைச் சிலம்பும் தங்கக் கொலிசும்
எண்டிசை மண்டலம் எங்கும் முழங்கத்
தொகுது துந்துமி தொந்தோ மெனவே
தகுதகு திந்திமி தாளம் முழங்க
ஆடிய பாதம் அண்டர்கள் போற்ற
நாடிமெய் அடியார் நாளும் துதிக்க
கருணை புரிந்து காட்சி தந்தருள
இருளைக் கடிந்து எங்கும் நிறையப்
பொங்குபே ரொளியாய் பொன்மலை போலத்
திங்கள் முடியான் திருவுளம் மகிழ
வந்த வாரண வடிவையும் காட்டி
சிந்தை தளர்ந்த சீரடி யார்க்கும்
இகபர சாதனம் இரண்டு முதவி
அகவினை துன்பம் அகந்தை அறுத்து
மூலா தார முச்சுடர் காட்டி
வாலாம்பிகை தன் வடிவையும் காட்டி
மாணிக்க மேனி மலர்ப்பதங் காட்டிப்
பேணிப் பணியப் பீசாட் சரமும்
ஓமென் றுதித்த ஓங்கா ரத்துள்ளே
ஆமென் றெழுந்த அட்சர வடிவும்
இடைபிங் கலைகள் இரண்டின் நடுவே
கடைமுனை சுழுமுனைக் கபாலமும் குறித்து
மண்டலம் மூன்றும் வாயுவோர் பத்தும்
குண்டலி யசைவில் கூறிய நாடியும்
பூதமும் பொறியும் புகழ் குணம் மூன்றும்
வாதனை செய்யும் அறிவையுங் காட்டி
ஆறா தார அங்குச நிலையைப்
பேறாகி நின்ற பெருமையுங் காட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்ச மூர்த்திகள் பாகத் தமர்ந்த
பஞ்ச சக்திகளின் பாதமுங் காட்டி
நவ்விட மெவ்வும் நடுவணை வீட்டில்
அவ்வும் ஆக்கினை அனாதி சதாசிவம்
மைவிழி ஞான மனோன்மணி பாதமும்
நைவினை நணுகா நாத கீதமும்
கண்டு வணங்கக் கண்ணைத் திறந்து
விண் தலமான வெளியையுங் காட்டி
ஐம்பத் தோரெழுத் தட்சர நிலையை
இன்பச் சக்கர விதிதனைக் காட்டி
புருவ நடுவினைப் பொற் கமலாசான்
திருவிளை யாடலின் திருவடி காட்டி
நாதமும் விந்தும் நடுநிலை காட்டிப்
போதம் நிறைந்த பூரணம் காட்டி
உச்சி வெளிதனில் உள்ளொளி காட்டி
வச்சிரம் பச்சை மரகத முத்துப்
பவளம் நிறைந்த பளிங்கொளி காட்டிச்
சிவ கயிலாயச் சேவையுங் காட்டி
சத்தம் பிறந்த தலத்தையுங் காட்டித்
தத்துவந் தொண்ணூற் றாறையும் நீக்கி
கருவி கரணக் களங்க மறுத்து
மருவிய பிறவி மாயையை நீக்கி
உம்பர்கள் இருடிகள் ஒருவருங் காணா
அம்பர வெளியின் அருளையுங் காட்டிச்
சத்தி பராபரை சதனந்தி நிராமய
நித்திய ரூபி நிலைமையுங் காட்டி
அடியவர் ஞானம் அமிர்தமா யுண்ணும்
வடிவை யறியும் வழிதனைக் காட்டி
நாசி நுனியில் நடக்குங் கலைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசிவா வென்று வாங்கிப் பிடித்து
நின்மல வடிவாய் நிறைவித் தப்புறம்
வின் மயமான விதத்தையுங் காட்டித்
தராதல முழுதும் தானாய் நிறைந்த
பராபர வெளியைப் பணிந்திடக் காட்டி
என்உடல் ஆவி யிடம்பொருள் யாவும்
தன்னுடை வசமாந் தவநிலை காட்டி
நானென்னும் ஆணவம் நாசம தாகத்
தானென வந்து தயக்கந் தீர
ஆன குருவாய் ஆட் கொண்டருளி
மோன ஞானம் முழுது மழித்து
சிற்பரி பூரண சிவத்தைக் காண
நற்சிவ நிட்கள நாட்டமுந் தந்து
குருவும் சீடனும் கூடிக் கலந்து
இருவரும் ஒருதனி இடத்தினிற் சேர்ந்து
தானந்த மாகித் தற்பர வெளியில்
ஆனந்த போத அறிவைக் கலந்து
புவனத் தொழிலைப் பொய்யென் றுணர்ந்து
மவுன முத்திரையை மனத்தினில் இருத்திப்
பெண்டு பிள்ளை பண்டு பதார்த்தம்
கண்டது மாயைக் கனவெனக் காட்டி
பாச பந்தம் பவக்கடல் நீக்கி
ஈசன் இணையடி யிருத்தி மனத்தே
நீயே நானாய் நானே நீயாய்
காயா புரியைக் கனவென உணர்ந்து
எல்லாம் உன்செயல் என்றே யுணர
நல்லாய் உன்னருள் நாட்டந் தருவாய்
காரண குருவே கற்பகக் களிறே
வாரண முகத்து வள்ளலே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்திய பூசை நைவேத் தியமும்
பக்தியாய்க் கொடுத்தேன் பரமனே போற்றி
ஏத்தி அனுதினம் எளியேன் பணயக்
கூற்றினை யுதைத்த குளிர்பதம் தந்து
ஆசு மதுர அமிர்தம் அளித்துப்
பேசுஞ் ஞானப் பேறெனக் கருளி
மனத்தில் நினைத்த மதுர வாசகம்
நினைவிலும் கனவிலும் நேசம் பொருந்தி
திருவள் ளுவரும் அவ்வையும் போலக்
கருத்து மிகுந்து கவிமழை பொழிய
வாக்குக் கெட்டா வாழ்வை யளித்து
நோக்கும் ஞான நோக்கு மளித்து
இல்லற வாழ்வை யிடையூ றகற்றிப்
புல்ல ரிடத்தில் புகுந்து உழலாமல்
ஏற்ப திகழ்ச்சி என்ப தகற்றிக்
காப்ப துனக்குக் கடன் கண்டாயே
நல்வினை தீவினை நாடி வருகினும்
செல்வினை யெல்லாஞ் செயலுன தாமால்
தந்தையும் நீயே தாயும் நீயே
எமரும் நீயே ஈசனும் நீயே
போத ஞானப் பொருளும் நீயே
நாதமும் நீயே நான்மறை நீயே
அரியும் நீயே அயனும் நீயே
திரிபுர தகனம் செய்தவன் நீயே
சக்தியும் நீயே சதாசிவம் நீயே
புத்தியும் நீயே புராந்தகன் நீயே
பக்தியும் நீயே பந்தமும் நீயே
முத்தியும் நீயே மோட்சமும் நீயே
ஏகமும் நீயே என்னுயிர் நீயே
தேகமும் நீயே தேகியும் நீயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னரு ளன்றி உயிர்த்துணை காணேன்
பின்னொரு தெய்வம் பேசவும் அறியேன்
வேதனை கொடுத்த மெய்மிது தன்னில்
வாத பித்தம் வருத்திடு சிலேத்துமம்
மூன்று நாடியும் முக்குண மாக்கித்
தோன்றும் வினையின் துன்பம் அறுத்து
நாலாயி ரத்துநா நூற்று நாற்பத்தெண்
மேலாம் வினையை மெலியக் களைந்து
அஞ்சா நிலைமை அருளிய நின்தன்
பஞ்சாட் சரநிலை பாலித் தெனக்குச்
செல்வமும் கல்வியும் சீரும் பெருக
நல்வரமே தரும் ஞான விநாயகா
சத்திய வாக்குச் சாந்தா யுதவிப்
புத்திரனே தரும புண்ணிய முதலே
வெண்ணீ றணியும் விமலன் புதல்வா
பெண்ணாம் உமையாள் பெற்றிடுந் தேவே
அரிதிரு மருகா ஆறுமுகன் துணைவா
கரிமுக வாரணக் கணபதி சரணம்
குருவே சரணம் குணமே சரணம்
பெருவயிற் றோனே பொற்றாள் சரணம்
கண்ணே மணியே கதியே சரணம்
விண்ணே யொளியே வேந்தே சரணம்
மானத வாவி மலர்த்தடத் தருகில்
தானத்தில் வாழும் தற்பரா சரணம்
உச்சிப் புருவத் துதித்துல களிக்கும
சச்சி தானந்த சற்குரு சரணம்
விக்கின விநாயக தேவே ஓம் ஓம்
அர அர சண்முக பவனே ஓம் ஓம்
சிவ சிவ மகாதேவ சம்போ ஓம்! ஓம்!

* _ * _ * _ * _ *



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன் துணை

# கந்தர் ஷஷ்டி கவசம்

## காப்பு

*நேரிசை வெண்பா*

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலன்அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடிநெஞ்சே குறி.

*நிலைமண்டில ஆசிரியப்பா*

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா வெண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா! நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் றீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுகுண டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ!
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியிணை அருள்வேல் காக்க
கைகளி ரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா னாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரு மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றான் வஞ்சகர் வந்து வணங்கிட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலதூ தாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்க
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதுடன் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக் குறவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரஹண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னா விருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன நாடினேன் ஆவினன் பூதியை
நேசமுடன் யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருள் ஆக
அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்று அடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்பது உன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்ற வளாமே
பிள்ளையென்று அன்பாய்ப் பிரியம் அளித்து
மைந்தன்என் மீதுன் மனமகிழ்ந்து அருளித்
தஞ்சமென்று அடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கம் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது ஆகிக்
கந்தர் சஷ்டி கவசம் இதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறுஅணிய
அஷ்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்த்தங்கு அருளுவர்
மாற்றலர் எல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமதன் எனவும் நல்எழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்து அடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழியாய்க் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்துஎனது உள்ளம் அஷ்ட லட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துஉண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்துஅமுது அளித்த
குருபரன் பழநிக் குன்றினில் இருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத்து ஆட்கொள்ள எந்தன் உள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோர் அரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

*கந்தர் சஷ்டி கவசம் முற்றிற்று.*

நாளென் செயும்வினை தானென் செயுமெனை நாடிவந்த
கோளென் செயும்கொடுங் கூற்றென் செயும்கும ரேசரிரு
தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்னே வந்து தோன்றிடினே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# நயினை ஸ்ரீ நாகபூசணி அம்மன்

# திருவூஞ்சல்

## காப்பு

சீர்பூத்த தென்னிலங்கை தன்னில் மேவும்
திரைபூத்த கடனயினை நகரில் வாழும்
ஏர்பூத்த நாகேசுவரியைப்போற்றி
இசைபூத்த செந்தமிழா லூஞ்சல் பாட
ஆர்பூத்த சடைமௌலியரனா ரீன்ற
அருள்பூத்த வறிவிச்சை தொழிலென் றோதும்
கார்பூத்த மும்மைமத களிற்றின் பாதம்
கம்பூத்த மலர்கொண்டே கருதி வாழ்வாம். 1

## நூல்

பலனோங்கும செம்பவளங் கால்க ளாக
பகர்வைர ரத்தினமே விட்டமாக
குலனோங்கும் வெண்டரளங் கயிறதாக
கூறரிய மாணிக்கம் பலகை யாக
வலனோங்கும மூஞ்சன்மிசை யினிது வைகி
மலர்மகளுங் கலைமகளும் வடந்தொட்டாட்ட
நலனோங்கு திரு நயினை நகரில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 2

உவகையொடு மலரயன்மால் கரங்கள் கூப்ப
ஓசைமணி வாயிலட்ட பாலர் காப்ப
தவமறையோர் தூபமொடு தீபங்காட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாழ்ந்துகண நாதர் புகழ் மாலைசூட்ட
அவரிடப துவசம்கல் வானந்தூர்ப்ப
அனந்தன்முதலுரகர்செய செயவென் றார்ப்ப
நவையறுசீர் நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல் 3

கொம்பினொடு துடிமுரசு முழவ மோங்க
குடைகளுட னாலவட்டம் குழுமி யோங்க
தும்புருநா ரதர்வேத கிதம்பாட
தொண்டரக மகிழ்ந்துசுக வாழ்வு கூட
வம்பவிழு மலர்மாரி யமரர் பெய்ய
வரமுனிவ ரடிபரவி யாசி செய்ய
நம்புமடி யவர்க்கருளி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ருஞ்சல். 4

அன்னநடை யயிராணி கவிகை தாங்க
அயிலைநிகர் விழியரம்பை களாசியெந்த
வன்ன முலை யுருவசிவெண் கவரி வீச
மணிகொள்கிரு தாசிகமண் டலங்கைக் கொள்ள
மின்னிடைமே னகைவெளிலை பாகு நல்க
வியந்துதிலோத்த தமைவிகித நடனஞ் செய்ய
நன்னயஞ் சேர் நயினை நகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியெ யாடீ ருஞ்சல். 5

மதிமுகமா லினிபனிநீர் வாசந் தூவ
மயிலைநிகர் சுகேசைமல ரடிக ணீவ
விதிமுறைமங் கலைமுதலோ ராலஞ் சாற்ற
வேதியர்தம் மகளீர் சுப வசனஞ் சாற்ற
அதிவினைய மொடுசுமனை யாடி காட்ட
அன்பினநிந் திதைசுகந்த வருக்க நீட்ட
நதியுலவு நயினைநகர் தன்னில் வாழும்
நாகபர மேஸ்வரியெ யாடீ ருஞ்சல் 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலமுறு வைரமணிச் சுட்டி யாட
குலவுமெழின் மாணிக்கத் தோடு மாட
வாலியமுத் தாரமொடு மதாணி யாட
வயங்குவளை தொடியுடனங் கதமுமாட
சாலவொளிர் பாடகமுஞ் சிலம்புமாட
தண்டையொடு பாதசரந் தயங்கி யாட
ஞாலமுக மென விளங்கும் நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல் 7

முந்துதவ மாதர் துதி கூறி யாட
முகமனொடு பனன்மாதர் முன்னின் றாட
வந்தனையோ டூரகமட மாத ராட
வரையிலுறை மாதரடி வணங்கியாட
கந்தருவ மாதரிசை பாடி யாட
கருதரிய புவிமாதர் களிகொண்டாட
நந்து தவழ் கழனிசெறி நயினை வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 8

ஆரணியே யம்பிகையே யாடீ ரூஞ்சல்
அந்தரியே சௌந்தரியே யாடீ ரூஞ்சல்
பூரணியே புங்கவியே யாடீ ரூஞ்சல்
புராதனியே புராந்தகியே யாடீர் ரூஞ்சல்
காரணியே காருணியே யாடீ ரூஞ்சல்
கன்னிகையே கண்மணியே யாடீ ரூஞ்சல்
நாரணியே நாயகியே யாடீ ரூஞ்சல்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 9

பனிவரையில் வருமுமையே பரையே போற்றி
பகருமறை மென்னான்கும் வளர்த்தாய் போற்றி
தனிமுதலாம் பரமனிடத் தவளே போற்றி
தணப்பில் பலசக்தி வடி வானவாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனிமைமிகு மாரமுதே கனியே போற்றி
எவ்வுயிர்க்கும் தாயாகி இருந்தாய் போற்றி
நனிகுலவு நயினைநகர் தனனில் வாழும்
நாகபர மேஸ்வரியே யாடீ ரூஞ்சல். 10

ஆவாழி யந்தணரோ டரசர் வாழி
அரியதவ மகநிகமா மகமும் வாழி
தாவில்குல மங்கையர்கள் கற்பும் வாழி
சைவசம யமுமறமும் தழைத்து வாழி
பாவார்வெண் ணீறுபஞ்சாட் சரமும் வாழி
பாடியவுஞ் சற்றமிழும் பாரில் வாழி
நாவலர்கள் புகழ்நயினை நகரும் வாழி
நாகபர மேஸ்வரியும் வாழி வாழி. 11

* - * - * - * - *

"அகரவுயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறைநிற்கும் நிறைந்து"

"எங்கும் எவையும் எரியுறுநீர் போல்
தங்கும் அவைதானே தனி"

- திருவருட்பயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திரு. தில்லையம்பலம் சதாசிவம் அவர்களின்
# *வாழ்க்கைத்தடம்*

யாழ்ப்பாணக்குடாநாட்டிலே தீவகம் எனப் பேசப்படும் தீவுகளின் தொகுதி வரலாற்றுச் சிறப்புடையது. இங்கு குடியேறிய மக்கள் தென்னிந்தியதமிழ்மரபினர் என்றும் சிறப்பாக இன்று வேதாரணியம் என்று அழைக்கப்படுகின்ற திருமறைக்காட்டுடன் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் வரலாறு கூறுகின்றது.

நெடுந்தீவில் குடியேறியவர் தனிநாயகம் முதலியும் அவரைச் சார்ந்தோருமாவார். புங்குடுதீவில் குடியேறியவர் தனிநாயகம் முதலியின் மைத்துனரான இனங்காத்த முதலியும் அவரைச் சார்ந்தோரும் எனபர். இனம்காத்த முதலியின் மரபினரே புங்குடுதீவின் தலைக்குடியாகவும் பெருவேளாளர்களாகவும் அக்காலத்து மக்களால் ஏற்றுக்ககொள்ளப்பட்ட மக்கள் தலைவர்களாகவும வாழ்ந்து வந்திருக்கிறார்கள். தீவகத்தின் கடைசி உடையாராக இருந்து மறைந்த அமரர் மாணிக்கம் முருகேசுஅவர்களாவார்.

அமரர் மாணிக்கம் முருகேசு அவர்களின் சிறியதாயாரான சிவகாமிப்பிள்ளை அவர்கள் ஆசிரியரும், தமிழ் அறிஞரும், புராண படனக்கலையை வளர்த்தவருமாகிய குமரேசுவாத்தியார் என்று செல்லப் பெயர் தாங்கிய நாராணர் தில்லையம்பலம் அவர்களை திருமணஞ்செய்து பெற்ற புத்திரச் செல்வங்களில் மூத்த புதல்வரே அமரர் சதாசிவம் அவர்கள்.

இவருக்கு உடன் பிறந்தவர்களாக அமரர் காமாட்சி தம்பிராசா, கனடா வாழ் பரநிருபசிங்கம், அமரர்களான தம்பிராசா(தபால் ஊளியர்), இரத்தினம் மற்றும் பாலசிங்கம் (இளைப்பாறிய கிராமசேவையாளர்)என்போர் கிடைத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் சதாசிவம் அவர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியராகி, அதிபாராகி அருந்தொண்டாற்றியவர். தனது நன்மாமன்மாரான காலம் சென்ற அம்பலவாணர் மற்றும் பொறியியாளர் வைத்திலிங்கம்(கொழும்பு) என்போரின் கணிதவிற்பனம் இவரிடம் பெரிதும் காணப்பட்டது.தனது தந்தை வழி சொத்தாகிய சோதிடம்.இவருக்கு கைவந்த கலையாயிற்று.ரிஷிவாக்கியங்களோடு அறிவையும் இணைத்து கிரங்களின் நடமாட்த்தினை செம்மையாகக் காண்பவர் என்ற புகழ்ச்சிக்கு உரியவரானார். இன்று செல்வாக்குப் பெற்று நிலவும் எண்சோதிடமும் இவரிடம் உறவு கொண்டது. சுருங்கச் சொன்னால் சோதிடக்கலை இவரிடம் அரவணைப்பு பெற்றது எனலாம். திருமுறையோதும் இனிமையும், பாங்கும் இவர் தனித்துவம் கொண்டவர்.

நல்லாசிரியனாய், ஆளுமையுடைய அதிபராய், சோதிடக்கலை வல்லுனராய், இறையருள் தேடிய ஒருவராய்வாழ்ந்த அமரர் சதாசிவம் அவர்கள் சங்ககாலத்தில் இலக்கணத்திற்கு ஏற்ப ஒத்த பண்புகள் யாவும் ஒருங்கே பொருந்திய தமிழ்ப் பெருங்குடி மக்களான கந்தையாவும் அன்னப்பிள்ளையும் பெற்ற புத்திரிகளான தர்மலட்சும், நாகம்மா ஆகியவர்களின் தலைமகள் ஆசிரியை தர்மலட்சுமியை அருந்துணையாக ஏற்று ஏற்றம் பெற்றார்.

இவர்களின் இல்லறம் "பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பிய பண்பு" தெரிந்தோர் உள்ளங்களை ம்கிழ்வித்தது. மங்கல மான இல்லறத்தின் பயனாக பிரேமகுமாரி, வத்சலா, வனஜய எனபுத்திரிகள் மூவரையும் பெற்று மகிழ்ந்தார்.

தலைமகளான ஆசிரியை பிரேமகுமாரியை நயினை தந்த அதிபர் கலைநாதனுக்கு வதுவை செய்வித்து ரூபதாரணி (வேமடபடி மகளீர் கல்லூரி யாழ்ப்பாணம்), பிரணரூபன் (அப்பன் ) ( யாழ் இந்துக்கல்லூரி), இருவரையும் பேரப்பிள்ளைகளாகப் பெற்று மகிழ்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது மகளான வத்சலாவையும் நயினை பயந்த ஆசிரியன் சிவபாலனுக்கு துணையாக்கி கிருத்திகா, தர்மிகா, தேனுகா என மூன்று பேர்த்திமரைப் பெற்று அவர்கள் கனடாவில் வாழக்கண்டு மகிழ்ந்தார் .

கடைக்குட்டி வனஜாவை புங்குடுதீவு தந்த ரவீந்திரனுடன் இயைவித்து சுஜீந்திரன், செந்தூரன் என் இரு பேரர்களைப் பெற்று அவர்கள் பிரான்சில் வாழக்கண்டு மகிழ்ந்தார். 1988ஆம் ஆண்டு 'தலைவன் பணியே தலையாய தர்மம்' என வாழ்ந்துகாட்டிய தர்மலட்சுமி இறைவனடி சேர்ந்த காலைஎல்லாம் இழந்த அமரர் சதாசிவம் மக்கள் மேற்கொண்ட காதலால் தேறி, வாழ்வாங்கு வாழ்ந்து 2001-12-13 வியாழக்கிழமை கிராஞ்சியம்பதி கந்தன் திருவடி நீழல் எய்தினார். வந்தவர் எல்லாம்போவது பரமனாலும் மாற்றமுடியாத நியதி. கிடைத்த மனிதப் பிறப்பை பயன் தருவதாய் தனக்கும் பிறருக்கும் பயன்தருவதாய் நல்லது செய்தல் முடியாத போதும் தீயது செய்தல் தவிர்த்து வாழ்தலே பிறவிப்பயன் என்பர்.

அமரர் சதாசிவம் அன்பு செய்யவல்ல உடன் பிறப்புக்களையும் , வள்ளுவருக்கு வாய்ந்த வாசுகியனைய வாழ்க்கைத்துணையையும், சான்றோராகிய புத்திரிகளையும், மாற்றுக் குறையா மருவிய மக்களையும், பாசத்தால் திணறவைத்த பௌத்திரர்களையும் பெற்று உயர்ந்தவர்.

இவர் 'வானுறையும் தெய்வத்துள் வைக்கபடுவார்' என்பதில் ஐயமின்று. இவர் இன்னுயிர் சாந்தி பெற எல்லம் வல்ல சித்திவிநாயகனை வணங்குவோமாக.

ஓம்சாந்தி! சாந்தி! சாந்தி!

புங்குடுதீவு-கந்தர்மடம்

அமரர் அன்பில் இன்பம் துய்த்த

"ஒருவன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அப்பா! உனைப்போற்றி வணங்குதுமே.

அப்பா! அன்பு காட்டி ஆதரவாய் வளர்த்தாய்
இது பொதுமை
அப்பா! உங்களிடம் நாங்கள் கண்ட மன உறுதி,
இயற்கைக்கு முகம் கொடுத்த இறுக்கம் வேறு எங்கும்
காணமுடியுமோ யாமறியோம்.
ஒரு சாதரண ஆசிரியன் ஒரு பெண் பெற்றதும் ஆடிப்
போகிற காலத்தில் மூன்று பெண்பிள்ளைகளைப் பெற்ற
போதும் நீங்கள் இமயமென நின்றீர்கள்.
உங்கள் வாழ்வியலில் எந்த மாற்றமும் இடம்
பெற்றதாக இல்லை.
எங்கள் உடல் வளத்தையும் உளவளத்தையும் நீங்கள்
வளர்த்த முறை உங்கள் வழி, தனித்துவமான வழி.
"உடல் வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"
என்ற திருமூலர் வாக்கில் உங்களுக்கு இருந்த
நம்பிக்கையா?

பட்டணத்துப் பள்ளிகளுக்கு அனுப்பிப் படிப்பித்த
நீங்கள். உரிய காலத்தில் துணைகளையும் தேடித்
தந்து வாழவைத்தீர்கள்.

மருவிய மக்களை மகன்களாகவே அன்பு காட்டி
னீர்கள். எங்கள் குழந்தைகளின் குறும்புகளை ரசித்தீர்கள்
சில கால் வரம்பு மீறியபோது உங்கள் சோதிடப் புலமை
விஞ்சிவர "ராகுவும் கேதுவும் செய்யும் தொழில்சரியா
கிவிடும்" என்று அமைதிகொண்டு ஆதரித்தீர்கள்.

இவையெல்லாம் அப்பா! எங்கள் நெஞ்சக்கல்லில்
பொறிக்கப்பட்ட அழியா நிலை எய்தின.
இன்று------------அப்பா எங்களை ஆசிர்வதியுக்கள்.

மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள் புலம்பல்

"மாமா" என்று அழைக்க வேண்டிய தேவையே இல்லாது தந்தையாய், தக்க நெறிகாட்டும் மித்திரனாய் அமைந்து எமை வழிப்படுத்திய பெரியோய், நின் பிரிவு நெஞ்சங்களை நீறாக்கி விட்டது.

எங்கள் வளத்திற்காய் நீங்கள் செய்த தியாகம் எமக்கு ஒருகலங்கரை விளக்கம்.

வாழ்க! நின் நாமம்.

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

தாத்தா! கணக்குமட்டுமா நீங்கள் சொல்லித் தந்தீர்கள்? நாங்கள் விட்ட கணக்கற்ற "கணக்குகளையும்" பொறுத்துக் கொண்டீர்கள்.

தாவி வந்த "தடிகளை" தட்டிவிட்டு எங்கள் மீது தளும்பு படாது காத்த எங்கள் உயிர் உள்ள கேடயமே, உங்கள் 'குலமுறை கிளர்த்துப்படலம்' மீண்டும் எப்போது கேட்பது?.

கிரகங்கள் ஒன்பதோடும் உறவாடினாய் ஊரவர்க்கு உறுதுணையாய் நின்று கிரகங்கள் ஊறு செய்யாது நிற்கப் பரிகாரம் செய்தாய். தங்கள் வழியில் நீ குறுக்கிட்டாய் என வெகுண்டனரோ? இருக்கவேமுடியாது.

நீ "சதாசிவன்" அங்கு பிரமனுக்கோ வேலைப்பழு. சதாசிவன் உன்னை அழைத்துக் கொண்டான். அவன் வாழ்க!

தாத்தா,அங்கிருந்தும் எம்மை வாழ்த்தி வழி நடாத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புராண புகழிசையின் தந்தையே

கண்ணில் கருமணியைக் காத்தது போல்
காத்து நின்ற என்னப்பா
கண்ணிலே நீரைத்தந்து விட்டு காணாமல்
போனதேனப்பா?

விண்ணிலே விடிவெள்ளி மறையுமுன்னே
விழித்தெழுந்து எங்களைப் பள்ளிக்கூடம் அனுப்பி
மண்ணிலே இருள்கவ்வும் போது - கையில்
மின்விளக்கு கொண்டு நின்று
விழித்தெருவில் எங்கள் வருகைக்காக காத்திருக்கும்
எங்களப்பா! இப்போதுமட்டும் ஏனப்பா காத்திருக்கவில்லை
நித்திரையில் கையணையில் பால்பருக்கி
பத்திரமாய் அணைத்து தூங்க வைத்த - உங்கள்
புத்திரச் செல்வத்தை, சித்தமும் பார்க்க எண்ணாமல்
எப்படித்தான் மனம் வந்து போனீர்களப்பா?
என்புத்தி கலங்கி நின்று புலம்புகின்றேனே!
புத்திரனேயில்லை, புதல்விகளைப் பெற்றேனென்று
நித்திரையின்றி எழுதிய கண்கள் தூங்கினவா?
கண்மணிகளைக் கரைசேர்க்கவென்று உச்சி
வெய்யிலில் கட்டி அளந்த கைகள் சோர்ந்தனவா?
புத்திரனாய் எண்ணியவர்கள் மனதில் சித்திரம்
வரைந்தார்கள்
உப்பிட்டவனைக் குப்பையில் தள்ளினார்கள் என்ற
சித்திரக்
கையெழுத்து என் மனதில் முத்தாக வடிந்திருக்கும்.
உங்கள் இரத்தம் சிந்திய அறிவு எங்களை என்றைக்கும்
மேன்மைப்படுத்தி வாழவைக்கும்.
பெண்பிள்ளைகள் என்றாலும் பெருமையுள்ள பதவிகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகித்த பெருமை பெற்றவர்களான உங்களுகே!
"திகடசக்கரச் செம்முகமைந்துளான்" எனத் தொடங்கும் கந்த புராணம் கேட்கும் போதெல்லாம உங்கள் புகழிசை எங்கும் செவிகளில் ஓங்கி நிற்கும்.
என் தந்தையே!

அன்பு மகள்
வனஜா இரவீந்திரன்.

# சதாசிவம் - பரசிவம்

சதாவசிவம், நீ பரசிவத்துடன் ஐக்கியமாகிவிட்டாய். இத்தனை வேகமாக உன் தங்கை காமாட்சியை தேடிச் சென்றுவிட்டாய்.

உனது மன உறுதி, கடமை உணர்வு எமது குலச் சிறுவர்களுக்கு முன்மாதிரியாக இருந்தது. - போய்விட்டாய்.

காலம் சீராக மாமாவை வந்து பார்ப்பாய் என்ற ஆதங்கம் அணைந்தது. உன் ஆத்மா இறைவன் பாதங்களில் சாந்தி பெற வணங்குகின்றோன்.
வேறு என்ன செய்வேன்?

மாமா
N.A வைத்திலிங்கம்
M.I.CE., M.I.Str.E (LOND)

எலிமாஸ் வீதி,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "சதாசிவ அண்ணர்"

எனக்குச் சொந்த அண்ணன் கிடையாது. தந்தை வழியிலும் தம்பியரே. தாய்வழியில் எல்லோரும் எனக்கு அண்ணன்மாரே.

போதுமடா இந்தப் பூமியென்று வான்புகுந்தோர் போக ஒரு அண்ணரும் சொந்தத் தம்பியும் அன்னிய நாட்டில் அடைக்கலம் புக சொந்தமண்ணில் தங்கியவர்கள் சதாசிவ அண்ணரும், மகாதேவா அண்ணரும்.

இடம்பெயர்வு இறுக்கம் தர சகோதரவாஞ்சை வளர்ந்து நிலைத்தது. எனக்கு "நவக்கிரகங்களில்" பெரிய நம்பிக்கையில்லை. சதாசிவ அண்ணருக்கு அவர்கள் தோழர்கள்.

தாங்கள் எங்கு நிற்கின்றார்கள் என்பதை உடனே தெரியப்படுத்தி விடுவார்கள். அத்தனை உறவு.

"அண்ணா! வியாழமாற்றமாம் எனக்கு எப்படி?" என்று கேடப்பேன். "எட தம்பி அவன் எங்கமாறினாலும் உனக்கு ஒன்றுமில்லை. வியாழன்தானே உன்னை இப்படி வைத்திருக்கிறான் " இது அண்ணர் பதில்.
"இன்னும் உத்தரிப்பு இருக்கு" நான்.
"ஏன் தம்பி அப்படிச் சொல்லுகிறாய்" உன் கடமைகள் இருக்கல்லவா? " சிரிப்புடன் அண்ணர் பதில்.

அண்ணா! அடுத்த வியாழமாற்றத்தின்போது நான் யாரிடம் போவேன்? "கோள் வைத்தாண்ட கொற்றவன்" என்று இராவணன் கம்பனால் போற்றப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா, நீங்கள் கோள் நிலை தெரிந்து கேளிரை வாழ்வித்த கொற்றவன். உங்கள் பிரிவு உங்கள் ஆத்மாவிற்கு விடுதலையாக இருக்கலாம். ஆனால் எமக்கு ஈடு செய்ய முடியாது..........

நீங்கள் மங்கல மறையோன் திருவடிநிழல் இருந்து எமக்காகவும் வேண்டிநிற்கப்பிரார்த்திக்கும்

தம்பி
க.சிவராமலிங்கம்.

**"தாயோ டறுசுவைபோந் தந்தையொடு கல்விபோம்
சேயோடு தான்பெற்ற செல்வம்போம் ஆயவாழ்
வுற்றா ருடன்போ முடன்பிறப்பாற் றோல்விபோம்
பொற்றாலியோடு டலையும் போம்."**

- ஔவையார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தங்கம் மச்சாளின் தலைமகன்

தங்கையைத் தேடி அண்ணன் சென்றான். செய்தி நெஞ்சை உலுக்கியது. நல்லாசிரியனாய், பாடசாலை அதிபராய் என் தொழிலில் பேராதரவாளனாய் உதவியவன் நீ.

எமக்காக கிராஞ்சிக் கந்தனின் தொண்டை மேற்கொள்ள இனியார்.? "சா" ஒன்றும் புதினமில்லை ஏன் இந்தக் கவலை எல்லாம் என்று எத்தனை பெரியவர்கள் சொல்லிவைத்தார்கள்.

மனம் என்ற ஒன்றும் உறவு என்ற தொடர்கயிறும் இருக்கும்வரை "கண்ணிறை நீர் கொள்ளலும்" கலக்கமும் நியதியை நினைந்து தேறவாமுடியும்.

பிள்ளைகளுக்கு எனது அனுதாபத்தைத் தெரிவித்து அமைகின்றேன்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

கொழும்பு

குஞ்சி
ப.கதிரவேலு J.P, U.M
சட்டத்தரணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புங்கை மண்ணின் புகழ் பூத்த மனிதன்.

அன்பும் இனிய பண்புகளையும் தனது உதிரத்தோடு சுமந்த வண்ணம் உருண்டு விரண்ட அழகிய தோற்றத்துடன் வெள்ளைவேட்டி நெசனல் சேட்டுடனும் நெற்றியில் குங்குமப் பொட்டுடனும் என்றும் காட்சிதரும் எனது அன்புக்குரிய அப்பா மறைந்து விட்ட செய்தி ஆற்றமுடியாத துயரத்தைத் தந்தது.

அமரர் குமரேசு வாத்தியார் என எல்லோராலும் அழைக்கப்படும் தில்லையம்பலம் சிவகாமிப்பிள்ளை தம்பதியினருக்கு முதல்மகனாய் வந்துதித்தார். தனது ஆரம்பக்கல்வியினை தான் பிறந்த மண்ணிலேயே கற்றுத்து தேறி திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக்கலாசாலையில் ஆசிரிய பயிற்சி நெறியை முடித்து தனது தந்தையார் மேற்கொண்ட ஆசிரியப் பணியினை புங்குடுதீவு கிழக்கு இராஜேஸ்வரியில் ஆரம்பித்து 18 வருடங்கள் கடமையாற்றி அப்பகுதி மக்களின் அன்புக்குரியவராக திகழ்ந்து பின்னர் இறுப்பிட்டி சித்திவிநாயகர் மகாவித்தியாலயம், இறுப்பிட்டி மிசன் பாடசாலைகளிலும் அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

எனதுஆசிரியையும், அமரரின் அருமைத்துணைவி யாருமான ஆசிரியை திருமதி தருமலட்சுமி அவர்களை வாழ்கைத் துணைவியாகப் பெற்று இனிய நன் மக்கள் , மருமக்களைப் பெற்றார்.

கல்விப்பணியோடு சமூகப்பணிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு தான் சார்ந்து வாழ்ந்த மக்கள் மீதும் மண்மீதும் தமிழின விடுதலைப்பற்றும் மிகுந்து காணப்படடு புங்குடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவு இணக்கசபையின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு தனது ஆற்றலையும், ஆளுமையையும் , நிதீ நேர்மையையும் வெளிப்படுத்தி கிராமத்தில் இடம் பெறும் பல்வேறு பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வைத்து எல்லோரின் பாராட்டுகளையும் பெற்றுக்கொண்டார் .

புங்குடுவுதீவு நயினாதீவு ப.நோ.கூட்டுறவு சங்கத்தின் தலைவராக விளங்கி பல அளப்பரிய சேவைகளை கிராம மக்களுக்கு வழங்கி புகழ்ச்சிகளைப் பெற்றுக் கொண்டார். புங்குடுதீவின் புகழ் பூத்த மனிதர் இன்று இல்லை என எண்ணும் போது எவ்வளவு துயரமாக உள்ளது.

எனது அப்பாவின் ஆத்மா சாந்தி பெற கிராஞ்சியம்பதி முருகனை வேண்டி நிற்கின்றேன்.

கனடா

சோ. சச்சிதானந்தன்
பேரன்
(முன்னாள் கிராமசேவையாளர்)

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

"இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றில் நின்ற துணை"

- திருவள்ளுவர் வாக்கு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தம்பிமார் உள்ளத்தில் இருந்து..........

எம்மை விட்டு எங்கு சென்றீர்கள்.?

அன்பின் உருவாக வாழ்ந்த அண்ணாவே
நடுநிசியில் தொலைபேசி மணியடிக்கத்
துயரமான செய்தியை தூக்கிக் கேட்போம்
மலைபோல் இருந்த அண்ணர் மாண்டுவிட்ட
செய்தி கேட்டு மனம் நெகிழ்ந்து மயங்கி விட்டோம்
குலைபோல வாழ்ந்த எங்கள் குடும்பம் -குலை
விட்டு பிரிந்தது போல் கடல் கடந்து அயல்நாடு
சென்று
கலங்குகின்றோம். அண்ணர் முகம் காணாத
பாவிகளானோம்.

அன்பையும் பண்பையும் அரவணைப்பையும்
அணிகலனாக கொண்டீர்கள். ஆசிரியப்பணியை
அறப்பணியாக கொண்டீர்கள் - சோதிடப் பணியைப்
தூய்மையாகச் செய்தீர்கள் - புராணங்கள் பயனைப்
பொழிப்புடன் ஓதினீர்கள்- பொதுத் தொண்டுகள் பல
செய்து புகழ் பெற்றீர்கள் - உங்கள் பெருமை கண்டு
அகமகிழ்ந்து வாழ்ந்தோம் அண்ணா. இவற்றை எல்லாம்
எண்ணி எண்ணி எங்கள் உள்ளத்துயரம் ஆறாய்ப்
பெருகுது அண்ணா.

காலையில் எழுந்திருந்து காலைக்கடன் முடித்து
கடவுள் தியானம் செய்து கனிவுடனேயே
காலை உணவருந்திக் கதைகள் பல பேசிவிட்டுச்
சோர்வுறும் போது காலனவன் கருகிவந்து உங்கள்
உயிர்கவர்ந்திட்டானே . கோழை மனம் கொண்ட
நாங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடி இங்கு குமுறியழ வைத்துவிட்டு எங்கு
சென்றீர்கள்
வாழையடி வாழை என வாழ்ந்த நாங்கள்
வயிறடித்துப்
புலம்புகின்றோம் கேளாய் அண்ணா.

பெற்றவளோ உன் அருகில் இல்லை அண்ணா
பெருமையுள்ள தந்தையும் உன்னருகில் இல்லை
அண்ணா
உற்ற பெரும் துணைவியாரும் உன்னருகில் இல்லை
அண்ணா
உடன் பிறந்த தங்கையரும் உன்னருகில் இல்லை
அண்ணா
பாசமுள்ள தம்பியரும் உன்னருகில் இல்லை
அண்ணா
பெற்றெடுத்த பிள்ளைகளும் உன்னருகில் இல்லை
அண்ணா
உற்ற பல உறவினரும் உன்னருகில் இல்லை
அண்ணா
என்ன எண்ணி உறங்கினீர்கள் சொல்லீர் அண்ணா.

கருணையற்ற காலனுனை கவர்ந்து சென்ற
காலையிலே நாம் நெகிழ்ந்து புலம்புகின்றோம்
கூடியமும் பாக்கியமும் எமக்கு இல்லை
கூட்டான நம் குடும்பம் எங்கும் இல்லை
நேற்றுவரை நாமெல்லாம் ஒன்றாய் வாழ்ந்தோம்
நினைத்தோமோ இந்நிலமை நிகழுமென்று
ஆண்டவனே உனை நினைத்து வருந்துகின்றோம்
அண்ணாவிற்கு அருள்புரிந்து இரட்சிப்பாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணாவின் பிரிவால் துயருறும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் உற்றார், உறவினர் அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவனே ஆறுதல் கொடுக்க வேண்டும் எனவும் அமரர் தம் ஆத்மா இறைவனடியில் நித்திய ஆத்ம சாந்தி பெற வேண்டும் எனவும் பிராத்திக்கின்றோம்.

பாசமிகு சகோதரர்கள்,
தி.பரநிருபசிங்கம்
தி.பாலசிங்கம்

கனடா.

உயர்ந்த நோக்கம், எளிய வாழ்க்கை என்ற சித்தாந் தத்தைக் கடைப்பிடி.

எவ்விதத்திலும் உண்மையையே பேசு குறைவாகவும் இனிமையாகவும் பேசு.


மற்றவர்கள் உணர்ச்சிகளை எப்பொழுதும் புண்படுத்தாதே. எல்லோரிடத்திலும் அன்பாக இரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்களுக்கு எங்கள் இதயம் நெகிழ்ந்த

# நன்றிகள்



எமது குடும்பத்தலைவர்
நோயுற்று வைத்தியசாலை
யில் இருந்த போது உடன் நின்று
உதவியவர்களுக்கும், அவர் சிவபதம் அடைந்த
செய்தி அறிந்து உடன் வந்து துன்பமுய்த்து பலவழி
களிலும் உதவி செய்தவர்களுக்கும் இறுதிக் கிரிகைகளில்
கலந்து சிறப்பித்த பெருமக்களுக்கும் தபால்,தாலைபேசி,
தொலைநகல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும்
தொலைத் தொடர்பு வசதிகைகளை உடனுக் குடன்
ஏற்படுத்தித்தந்த T.T தொலைத் தொடர்பகத்தினருக்கும்
பல வழிகளில் உதவி புரிந்த கந்தர்மடம் வாழ்
மக்களுக்கும் அஞ்சலியுரையை
நிகழ்த்திய பெருமக்களுக்கும் கண்ணீர்
அஞ்சலிப் பிரசுரங்களை
வெளியிட்டவர்களுக்கும் மலர்
வளையங்களை வழங்கியோருக்கும்
அந்திம கால சேவையை சிறப்பாக வழங்கிய
வைற் ஹவுஸ் நிறுவனத்தினருக்கும் மற்றும் சபண்டீகரண
நிகழ்சிகளிலும் வீட்டுக்கிருத்திய பிரார்த்தனைகளில் பங்கு
கொண்டவர்களுக்கும் இம்மலரை சிறப்புற அச்சிட்டுத் தந்த
பாரதி பதிப்பகத்தினருக்கும் எமது நன்றிகளும்,
வணக்கங்களும் உரித்தாகட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வமிசாவ

தில்லையம்பலம் + சிவகாமிப்பிள்ளை

சதாசிவம்

காமாட்சி
(அமரர்)
+
தம்பிராசா (அமரர்)

பரநிருபசிங்கம்
(கனடா)
+
மீனாட்சி

தம்பிராசா
(அமரர்)
+
வர்ணமணி (அமரர்)

இரத்தினம்
(அமரர்)

பிறேமகுமாரி
+
கலைநாதன்

ரூபதாரணி
பிரணவரூபன் (அப்பன்)

வத்சலா (கனடா)
+
சிவபாலன்

கிருத்திகா
தர்மிகா
தேனுகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவளி

கந்தையா + அன்னப்பிள்ளை

இரத்தினம்
(அமரர்)

)

பாலசிங்கம்
(கனடா)
+
பாக்கியலட்சுமி

தர்மலட்சுமி

நாகம்மா
+
நல்லதம்பி

கனடா)

ன்

கா
ா
ன்

வனஜா (பிரான்ஸ்)
+
இரவீந்திரன்

சுஜீந்திரன்
செந்தூரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரதி பதிப்பகம் 430, கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org